ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1801/24 - 2013 මාර්තු මස 13 වැනි බදාදා - 2013.03.13
*1801/24 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1993 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, 1995 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நியதிச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான 1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மேல் மாகாண மாகாண சபையின் வழிப்பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகள் நியதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைகள்.*

*1992 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மேல் மாகாண மாகாண சபையின் வழிப்பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகள் நியதிச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் பிரகாரம் மேல் மாகாண சபையின் வழிப்பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் பொறுப்புக்களின்படி அவ்வதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட 2012.09.24 ஆந் திகதிய 1772/12 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட கட்டளைகள் கீழ்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கட்டளை 1 -* தற்போது மேல் மாகாண வழிப்பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் போக்குவரத்திற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் உரிமையை வழங்குகையில் அறவிடப்படும் 100,000 ரூபா தொகை 2012.12.26 ஆந் திகதி முதல் 2013.03.25 ஆந் திகதிவரை 70,000 ரூபாவாகத் திருத்தஞ் செய்யப்பட்டு அறவிடப்படும்.

*கட்டளை 2 -* 2012, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 1777/12 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகள் கட்டளைகளில் 4 ஆவது உபபிரிவில் 1, 6, 15 ஆம் இலக்க கட்டணங்கள் மாத்திரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2012.12.26 ஆந் திகதி முதல் 2013.03.25 ஆந் திகதிவரை திருத்தஞ் செய்யப்பட்டு அறவிடப்படும்.

| | | ரூபா சதம் |
|---|---|---|
| 1. | ஒரு பஸ்ஸுக்கு பிரயாணிகள் சேவைகள் அனுமதிப்பத்திரத்திற்கானது | 3,500. 00 |
| 6. | ஒரு பஸ்ஸுக்கான மாதாந்த சேவைக் கட்டணம் (சாதாரண) | 750. 00 |
| 15. | ஒரு பஸ்ஸுக்கான மாதாந்த சேவைகள் கட்டணம் (ஆடம்பர) | 750. 00 |

மேலும் 2012, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 1777/12 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேல் மாகாண மாகாண சபையின் அறிவித்தலில் உள்ள கட்டணங்கள் 2013.03.26 ஆந் திகதியிலிருந்து மீண்டும் அறவிடப்படும்.

எச். எம். உபாலி கொடிகார,
போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாச்சார அலுவல்கள்,
கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கலும் விநியோகமும் ,
கிராம அபிவிருத்தி அலுவல்களுக்குமான அமைச்சு.

கொழும்பு,
*2013, மாச்சு 13.*

*3- 1102*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.